**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE,CHEYYAR**

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. **SC No. 10/2021**

Deposition of witness for } Prosecution **- LW - 3 / PW - 2**
Defence
Court

Name : **திரு. ஹரிகிருஷ்ணன்**

Father's Name : **திரு. பரசுராமன்**

Village : **கீழ்நேத்தப்பாக்கம்**

Taluk : **செய்யாறு**

Calling : **விவசாயம்**

Age : 41

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th Day of August 2025.

**(எதிரி ஆஜர்.)**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**முதல் விசாரணை :**

1. நான் கீழ்நேத்தப்பக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 ஜீவாவை தெரியும். இருவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் மதியம் சுமார் 12.30 மணியளவில் நான் கழனிக்கு சென்றுவிட்டு திரும்ப வந்துகொண்டிருந்தபோது ஜீவா என்பவர் ரோட்டில் இருந்தார். அவருக்கு கை வெட்டப்பட்டு ரோட்டில் விழுந்து கிடந்தார். அவரை யார் வெட்டியது என்று எனக்கு தெரியாது. நான் ஜீவா

என்பவர் ரோட்டில் விழுந்து கிடந்ததை பார்த்தேன். அப்போது அவர் கை வெட்டப்பட்டு இருந்தது. மற்றபடி வேறு எந்த விஷயத்தையும் நான் நேரில் பார்க்கவில்லை. பின்னர், அவரை டாட்டா AC-ல் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

(சாட்சி அரசு தரப்புக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1. எங்கள் ஊரைச் சேர்ந்த ஜீவா என்பவருக்கும், ஆஜர் எதிரி ஜோதி என்பவருக்கும் பொது வழி சம்மந்தமாக ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது என்றும், 16.12.2013-ம் தேதி மதியம் 12.30 மணிக்கு ஜோதி என்பவர் முள்விறகுகளை ஜீவா வீட்டின் ஓரம் போட்டதாகவும், அதனை ஜீவா கேட்டதற்கு எதிரி ஜீவாவை பார்த்து அசிங்கமாக திட்டி, கையில் வைத்திருந்த கொடுவாள் கத்தியால் ஜீவாவை ஒழிந்து போடி என சொல்லி ஓங்கி வெட்டியதாகவும், அப்போது ஜீவா வலது கையால் தடுத்தபோது, ஜீவாவிற்கு வலது கை மணிக்கட்டில் வெட்டுக்காயம் ஏற்பட்டதாகவும், மறுபடியும் எதிரி ஒழிந்துபோடி என வெட்டவந்தபோது, இடது கையில் தடுத்தபோது இடது கையில் இரத்த காயம் ஏற்பட்டதாகவும், ஜோதி ஜீவாவை மாறி மாறி வலது முழுங்கை, இடது மார்பில் வெட்டியதால் ஜீவாவிற்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும், ஜீவா கூச்சல் போட்டு தெருவில் ஓடிவந்து விழுந்துவிட்டார் என்றும், அந்த சம்பவத்தை சத்தம் கேட்டு நான், ஏழுமலை, சரவணன், முத்தம்மாள் ஓடிவந்து ரோட்டில்

பார்த்தோம் என்றும், பின்னர் காயம்பட்ட ஜீவாவை டாட்டா ஏசி வண்டியை வரவழைத்து காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தாகவும், சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தபோது, சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்று வாக்குமூலம் அளித்துவிட்டு, எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவரை காப்பாற்றவேண்டி அரசு தரப்புக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** : இல்லை.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.25 17:44:47 +0530

**Additional Subordinate Judge,**
**Cheyyar.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE,CHEYYAR**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **SC No. 10/2021** |
| Deposition of witness for | Prosecution - **LW - 4 / PW - 3**<br>Defence<br>Court |

Name : **திரு. சரவணன்**

Father's Name : திரு. ஏழுமலை

Village : கீழ்நேத்தப்பாக்கம்

Taluk : செய்யாறு

Calling : விவசாயம்

Age : 40

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th Day of August 2025.

(எதிரி ஆஜர்.)

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

முதல் விசாரணை :

1. நான் கீழ்நேத்தப்பக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 ஜீவாவை தெரியும். ஜீவா என்னுடைய வீட்டிலிருந்து 3-வது வீட்டில் வசிக்கிறார். இருவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் மதியம் சுமார் 01.00 மணிக்கு நான் வேலைக்கு போய்விட்டு வந்தேன். அப்போது, ஜீவாவும் ஜோதியும் சண்டை போட்டுக்கொண்டார்கள். அவர்களுக்குள் என்ன சண்டை என்று

தெரியாது. அந்த சமயத்தில் ஜனங்கள் கும்பலாக வேடிக்கை பபார்த்துக்கொண்டிருந்தார்கள். நானும் வந்த பார்த்தபோது, ஜீவா என்பவர் கீழே விழுந்து கிடந்தார். அவரது கையில் இரத்தம் வந்துகொண்டிருந்தது. மற்றபடி வேறெதையும் நான் பார்க்கவில்லை. இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரணைக்கு வந்ததாக சொல்லி என் பெயர் ஊரைக் கேட்டார்கள். நான் சொன்னேன்.

(சாட்சி அரசு தரப்புக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1. எங்கள் ஊரைச் சேர்ந்த ஜீவா என்பவருக்கும், ஆஜர் எதிரி ஜோதி என்பவருக்கும் பொது வழி சம்மந்தமாக ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது என்றும், 16.12.2013-ம் தேதி மதியம் 12.30 மணிக்கு ஜோதி என்பவர் முள்விறகுகளை ஜீவா வீட்டின் ஓரம் போட்டதாகவும், அதனை ஜீவா கேட்டதற்கு எதிரி ஜீவாவை பார்த்து அசிங்கமாக திட்டி, கையில் வைத்திருந்த கொடுவாள் கத்தியால் ஜீவாவை ஒழிந்து போடி என சொல்லி ஓங்கி வெட்டியதாகவும், அப்போது ஜீவா வலது கையால் தடுத்தபோது, ஜீவாவிற்கு வலது கை மணிக்கட்டில் வெட்டுக்காயம் ஏற்பட்டதாகவும், மறுபடியும் எதிரி ஒழிந்துபோடி என வெட்டவந்தபோது, இடது கையில் தடுத்தபோது இடது கையில் இரத்த காயம் ஏற்பட்டதாகவும், ஜோதி ஜீவாவை மாறி மாறி வலது முழுங்கை, இடது மார்பில் வெட்டியதால் ஜீவாவிற்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும், ஜீவா கூச்சல் போட்டு தெருவில் ஓடிவந்து விழுந்துவிட்டார் என்றும், அந்த சம்பவத்தை சத்தம்

கேட்டு நான், ஏழுமலை, ஹரிகிருஷ்ணன், முத்தம்மாள் ஓடிவந்து ரோட்டில் பார்த்தோம் என்றும், பின்னர் காயம்பட்ட ஜீவாவை டாட்டா ஏசி வண்டியை வரவழைத்து காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தாகவும், சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தபோது, சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்று வாக்குமூலம் அளித்துவிட்டு, எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவரை காப்பாற்றவேண்டி அரசு தரப்புக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** : இல்லை.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.25 17:45:04 +0530

**Additional Subordinate Judge,**
**Cheyyar.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE,CHEYYAR**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **SC No. 10/2021** |
| Deposition of witness for | Prosecution **- LW - 5 / PW - 4**<br>Defence<br>Court |

Name : **திருமதி. முத்தம்மாள்**

Husband's Name : **திரு. சரவணன்**

Village : **கீழ்நேத்தப்பாக்கம்**

Taluk : **செய்யாறு**

Calling : **தனியார் வேலை**

Age : 34

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th Day of August 2025.

**(எதிரி ஆஜர்.)**

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை :**

1. நான் கீழ்நேத்தப்பக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். சிப்காட்டில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 ஜீவாவை தெரியும். இருவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். சுமார் 16 வருடங்களுக்கு முன்னர் மாலை 04.30 மணிக்கு எங்கள் ஊரில் ஒரே கூட்டமாக இருந்தது. நான் என்னவென்று போய் பார்த்தேன். அந்த சமயத்தில் ஜீவா என்பவர் கீழே விழுந்து கிடந்தார். அவருக்கு எங்கு அடிபட்டிருந்தது என்று நான் பார்ககவில்லை. ஜீவாவிற்கு இரத்தம் வந்து

கொண்டிருந்தது. மற்றபடி நான் எந்த சம்பவத்தையும் நான் நேரில் பார்க்கவில்லை. ஜீவாவிற்கு எப்படி அடிபட்டது என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரணைக்கு வந்ததாக சொல்லி என் பெயர் ஊரைக் கேட்டார்கள். நான் சொன்னேன்.

(சாட்சி அரசு தரப்புக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை)

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> :

1. எங்கள் ஊரைச் சேர்ந்த ஜீவா என்பவருக்கும், ஆஜர் எதிரி ஜோதி என்பவருக்கும் பொது வழி சம்மந்தமாக ஏற்கனவே பிரச்சனை இருந்து வந்தது என்றும், 16.12.2013-ம் தேதி மதியம் 12.30 மணிக்கு ஜோதி என்பவர் முள்விறகுகளை ஜீவா வீட்டின் ஓரம் போட்டதாகவும், அதனை ஜீவா கேட்டதற்கு எதிரி ஜீவாவை பார்த்து அசிங்கமாக திட்டி, கையில் வைத்திருந்த கொடுவாள் கத்தியால் ஜீவாவை ஒழிந்து போடி என சொல்லி ஓங்கி வெட்டியதாகவும், அப்போது ஜீவா வலது கையால் தடுத்தபோது, ஜீவாவிற்கு வலது கை மணிக்கட்டில் வெட்டுக்காயம் ஏற்பட்டதாகவும், மறுபடியும் எதிரி ஒழிந்துபோடி என வெட்டவந்தபோது, இடது கையில் தடுத்தபோது இடது கையில் இரத்த காயம் ஏற்பட்டதாகவும், ஜோதி ஜீவாவை மாறி மாறி வலது முழுங்கை, இடது மார்பில் வெட்டியதால் ஜீவாவிற்கு இரத்த காயம் ஏற்பட்டதாகவும், ஜீவா கூச்சல் போட்டு தெருவில் ஓடிவந்து விழுந்துவிட்டார் என்றும், அந்த சம்பவத்தை சத்தம் கேட்டு நான், ஏழுமலை, ஹரிகிருஷ்ணன், சரணனன் ஓடிவந்து ரோட்டில் பார்த்தோம் என்றும், பின்னர் காயம்பட்ட ஜீவாவை டாட்டா ஏசி வண்டியை

வரவழைத்து காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தாகவும், சம்பவம் குறித்து போலீசார் விசாரித்தபோது, சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்று வாக்குமூலம் அளித்துவிட்டு, எதிரி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவரை காப்பாற்றவேண்டி அரசு தரப்புக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :** இல்லை.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.25 17:45:14 +0530

**Additional Subordinate Judge,**
**Cheyyar.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE JUDGE,CHEYYAR**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. **SC No. 10/2021** |
| Deposition of witness for | Prosecution - **LW - 6 / PW - 5**<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | : **திரு. மணி** |
| Father's Name | : திரு. துலுக்கானம் |
| Village | : கீழ்நேத்தப்பாக்கம் |
| Taluk | : செய்யாறு |
| Calling | : பெட்டி கடை |
| Age | : 53 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th Day of August 2025.

**(எதிரி ஆஜர்.)**
**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**
**முதல் விசாரணை :**

1. நான் கீழ்நேத்தப்பக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். பங்க் கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 ஜீவாவை தெரியும். இருவரும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் நான் செய்யாரில் வைத்துள்ள பங்க் கடைக்கு வந்து மீண்டும் சாய்ங்காலம் 03.00 மணிக்கு வீட்டிற்கு சென்றேன். அப்போது எங்கள் தெருவில் ஜீவாவிற்கும், ஆஜர் எதிரிக்கும் சண்டை என்று பேசிக்கொண்டார்கள். பின்னர், மீண்டும் நான் கடைக்கு வந்து

வீட்டிற்கு சென்றபோது, ஆஜர் எதிரி ஜோதி ஜீவாவின் கையில் அடித்துவிட்டதாகவும், இருவரும் அடித்துக்கொண்டதாகவும் சொன்னார்கள். போலீசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்ததற்கு ஆதாரமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். **அந்த பார்வை மகஜர் – அ.சா.ஆ.2 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் எழுதாத வெள்ளை தாளில் கையெழுத்து போட்டேன் என்றால் தற்போது ஞாபகமில்லை. சம்பவம் நடந்த தேதியிலிருந்து இன்றைய தேதி வரை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்களா என்றால் இல்லை. போலீசார் என்னிடம் இரண்டு கையெழுத்துக்கள் பெற்றப்பட்டதாக சொல்வது சரியா என்றால் இல்லை, நான் ஒரு கையெழுத்து மட்டும்தான் போட்டேன். அதனால், இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.

Taken down by me in open Court read over / interpreted to the witness and same has been admitted by the witness to be correct.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.25 17:45:26 +0530

**Additional Subordinate Judge,**
**Cheyyar.**